ஊராட்சி ஒன்றியம்
0 JAN 2021
மண்டபம் (இ) உச்சிப்புளி.

கருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – பணியில் இருக்கும் போது காலமான உதவியாளர் திரு.கோ.கார்த்திக் என்பவரின் மனைவி திருமதி.க.சோஜன்யா ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ.3) துறை</u>

அரசாணை (4ப) எண்.63

நாள்: 17.10.2020
சார்வரி, ஐப்பசி, 01
திருவள்ளுவர் ஆண்டு– 2051

படிக்கப்பட்டவை:

1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.40284/வி3/2018, நாள் 16.10.2019.
2. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள்23.01.2020
3. .ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.8810/2020/டி3, நாள் 16.07.2020.

*****

<u>ஆணை:</u>

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 13.08.2018 அன்று பணியிடைக் காலமான திரு.கோ.கார்த்திக் என்பவரின் மனைவி திருமதி.க.சோஜன்யா என்பவருக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 21.10.2019 பிற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மனைவி திருமதி.க.சோஜன்யா கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 03.09.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 25.07.1987 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 31 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 31 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 32 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஊர்நல அலுவலர் நிலை–2 / இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.க.சோஜன்யா என்பவர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 21.10.2019 பிற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 09.10.2010 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.15007/ட்டி.1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.25793/ஜி1/2020, நாள் 14.10.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

<u>நகல்:</u>
திருமதி.க.சோஜன்யா, இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம்.
( வழி: இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மே.கு.க.எண்.வி3/40284/2018 நாள்: .12.2020

அரசாணை (4ப எண்:63 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை நாள்: 17.10.2020

நகல் சார்புசெய்யப்படுகிறது

ந.க.வி3/40284/2018, நாள்: .12.2020

மாவட்ட ஆட்சியரகம்
இராமநாதபுரம்

பெறுநர்:

திருமதி.க.சோஜன்யா,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், மண்டபம்.
(இரு நகல்களில் ஒன்றினை சார்பு செய்து மீள அனுப்பும் பொருட்டு)

நகல்:

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
மண்டபம்.